1992 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரங்கள் வெட்டியது அந்தக் காலம். ஆனால், புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, எந்த இடத்தில் மரங்களை வெட்டினாலும், கடுமையான நடவடிக்கை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதே போல, பொது மக்களுடைய விழிப்புணர்ச்சிக் குழு ஒன்றை உருவாக்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. ஆகவே, பொதுமக்கள் அந்த நேரத்திலே எங்களுடைய கவனத்திற்கு ஏதாவது ஒரு இடத்தில், ஒரு சிறிய தவறு ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டாலும் கூட, உடனுக்குடன் இந்த அரசு தங்குதடையின்றி யாராக இருந்தாலும் கைது செய்து, குண்டர் சட்டத்திலே கைது செய்து கொண்டிருக்கிறது. ஆகவே இது போன்ற தவறுகள், இந்த அரசைப் பொறுத்த வரையில், நம்முடைய தமிழக அரசு, அதுவும் ஒப்பற்றத் தலைவியாக இருக்கிற புரட்சித் தலைவி அவர்களுடைய அரசில் நடைபெறாது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. என். பன்னீர் செல்வம்.

திரு. என். பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே, பல....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி, குமரி மாவட்டத்தைப் பற்றியது (குறுக்கீடு) இல்லை, இல்லை. அதற்கு உங்களுக்குப் பதில் வராது. இது 'ஸ்பெஸிபிக் கொஸ்டியன்' குமரி மாவட்டத்தைப் பற்றியதாகும்.

முற்பகல் 10-00

வினா எண் 577, டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

577—

அரசு ரப்பர் சழகத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு மேற்பார்வையாளராக பதவி உயர்வு அளித்தல்.

*3118—டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டம் அரசு ரப்பர் கழகத்தில் 20 ஆண்டுகளாக பணியாற்றி வரும் பால்வெட்டும் தொழிலாளர்களில் 100 பேருக்கு ஒருவர் என்ற வீதத்தில் மேற்பார்வையாளர் (Supervisor) பதவி உயர்வு கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பதவி உயர்வு அளிக்கப் படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : கன்னியாகுமரி மாவட்டம் அரசு ரப்பர் கழகத்தில் 20 ஆண்டுகளாக பணியாற்றிவரும் பால்வெட்டும் தொழிலாளர்களில் 100 பேருக்கு ஒருவர் என்ற வீதத்தில் மேற்பார்வையாளர் (Supervisor) பதவி உயர்வு கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு ஏதும் இல்லை.

டாக்டர் மு. அப்துல்முத்து பிள்ளை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் அரசு ரப்பர் கழகத்தில் 20 ஆண்டுகளாக 'டேப்பர்' வேலை பார்த்து வருகிறார்கள். இவர்களுக்கு சூப்பர்வைசர்களாகப் பதவி உயர்வு கொடுக்காவிட்டாலும் 'டேப்பர்' கிரேடு 1, 2,3, என்று சீனியாரிட்டி முறையில் பல்வேறு பதவி உயர்வு கொடுக்க அரசு முன்வருமா என்றும், அவர்களுக்கு ஊக்க ஊதியம் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருப்பது சூப்பர்வைசர்களாக அவர்களுக்குப் பதவி உயர்வு தரப்படுமா என்பதுதான். அங்கே சூப்பர்வைசர்களாகப் பணியாற்றுகின்றவர்கள், சரகர்கள் மற்றும் வனக் காவலர்கள் தான் அதைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். 100 பேருக்கு ஒருவராகப் பார்வையிட்டு ஏறத்தாழ அந்தப் பணியிலே உள்ளவர்கள் 42 பேர்கள் இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப் போல இது போன்ற குறிப்புகள் அரசின் கவனத்திற்கு வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 578. திரு. ம. சின்னசாமி. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

578—

போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் ரப்பர் தொழிற்சாலை.

*5270— திரு. ம. சின்னசாமி :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :